19

## இறங்கினார், ஏறினார், ஆதலால் ...

Because He descended and ascended ...

### *முகவுரை*

- கிறிஸ்துவின் வாழ்க்கை:

  நான்கு முக்கிய கட்டங்கள்

  மனுவுருவெடுத்தது — பரத்திலிருந்து இகத்திற்கு
  மரித்தது — இகத்திலிருந்து பாதாளத்திற்கு
  உயிர்த்தது — பாதாளத்திலிருந்து இகத்திற்கு
  பரமேறியது — இகத்திலிருந்து பரத்திற்கு

இச்சரித்திரச் சம்பவங்கள் நமது அனுபவத்தில் பிரதிபலிக்கவேண்டும்.

- புதிய ஏற்பாட்டு நிருபங்களின் உபதேசம் —
  கிறிஸ்துவோடு அடையாளப்படுத்திக்கொள்ளவேண்டும்.
  *சிலுவையிலறையப்பட்டு, அடக்கம்பண்ணப்பட்டு,*
  *எழுந்திருந்து, அவரோடு உட்கார்ந்து ...*
  (ரோ 6:3-6; எபே 2:6)

  இவ்வித அடையாளப்படுத்துதலாலேயே அனைத்து
  ஆன்மீக ஆசீர்வாதங்களும் நமதாகின்றன (எபே 1:3)

  தீர்க்கதரிசனம்: சங் 68:18,19 ... *உன்னதம் ஏறி ... வரங்கள் ...*
  *வாசம் ... ''தினசரி ஆசிகள்''*

  இந்த ஆசிகளில் முதன்மையானது: **விடுதலை**
  அதாவது, இரட்சிப்பு (வச 19,20)
  எபே 4:8 ... *சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி ...*

  ''சாத்தானின் சிறைக்கைதிகள்
  கிறிஸ்துவின் பிள்ளைகளாகின்றனர்!''

  இவை யுத்தத்தில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள்!
  எனவேதான் கிறிஸ்து *''நமது இரட்சிப்பின் அதிபதி''*
  என்றழைக்கப்படுகிறார் (எபி 2:10)



### *கிறிஸ்துவின் மூலம் கிட்டும் விடுதலையின் ஏழு அம்சங்கள் —*

#### *1. மாம்சீகச் சிறையிலிருந்து விடுதலை* (Carnalism)

- கிறிஸ்து நமக்காய் *மாம்சத்தில் பாடுபட்டபடியால்* நாம் இனி *மாம்ச இச்சைகளில்* வாழக்கூடாது ... 1 பேது 4:1,2,3,4
  *இஷ்டம்* போன்ற *இச்சை* வாழ்வு இனி கிடையாது (வச 3)

  கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம் (ரோ 6:14)
  — இனி பாவத்திற்கு அடிமைகளல்ல (வச 6,7)

  எ.கா.) ஞானஸ்நானம் — அது அடையாளப்படுத்துவது ... ரோ 6:3-6
  நோவா — இச்சைக்கும் இழிவுக்கும் விற்கப்பட்ட
  உலகிற்குத் தப்புவிக்கப்பட்டான் (1 பேது 3:20-22)

- கிறிஸ்துவின் மரணம் — பாவத்தின் **தண்டனையிலிருந்து**
  (கடந்த காலம்) விடுதலை (ரோ 6:23)
  உயிர்த்தெழுதல் — பாவத்தின் **வல்லமையிலிருந்து** விடுதலை
  (நிகழ்காலம்)
  *''கிறிஸ்து எழுந்திராவிடில் இன்னும் பாவத்தில்''* (1 கொரி 15:3,17)
  பரமேறுதல் — பாவத்தின் **பிரசன்னத்திலிருந்தே** விடுதலை
  (எதிர்காலம்) (எபி 9:27,28)

- பூவுலகுக்கு வருமுன் பரலோகில் கிறிஸ்துவின் பிரிவுரை:
  *''ஓர் உடல்''* (எபி 10:5-7)
  அவர் அதைத் தூய்மையாய்க் காத்துச் சிலுவையில் பிதாவிடம் ஒப்படைத்தார்.

  அப்படியே *நமது உடல்களை ஜீவபலியாய்* ... ரோ 12:1,2
  (கொல்லப்பட்டுள்ள மிருகம், பறவை போலல்ல.)
  இதன் பொருளென்ன? இறைச்சித்தத்திற்கு இணைந்து சிந்திக்கப் புதிதாக்கப்பட்ட மனது (ரோ 12:2).
  கிறிஸ்துவைப் போலவே ... *''உம் சித்தம் செய்ய''* (எபி 10:7)

#### *2. பணப் பிரியச் சிறையிலிருந்து விடுதலை* (Materialism)

- உயிர்த்த கிறிஸ்துவைப் பவுல் சந்தித்தபோது ...
  *''சிலுவையேயன்றி எதைக் குறித்தும் பெருமையில்லை''*
  கலா 6:14
  *''உலகம் எனக்குச் சிலுவையில் அறையப்பட்டுள்ளது''*
  *''நானும் உலகிற்குச் சிலுவையில் அறையப்பட்டுள்ளேன்''*

கிறிஸ்துவின் சிலுவைக்கு எதிரிகளுக்காய்ப் பவுலின் கண்ணீர் —
பிலி 3:18,19 (பிரசங்கிமார்)

- ''ஆன்மீக'' ஆசீர்வாதங்கள் நம்மைத் திருப்திப்படுத்தும்போது, ''இவ்வுலக'' நன்மைகள் நம்மைக் கவராது (கொலோ 3:1-3)

எ.கா.) ஆபிரகாம் —
சோதோமின் இராஜாவின் பொருட்கள்
vs.
சாலேமின் இராஜாவின் அப்பம் (ஆதி 14:18-23)

- சுகபோக வாழ்வு உபதேசம் — இன்று மிகப் பிரபலமானது. இயேசு அன்றே அதற்கெதிராய்ப் பேசினார் (யோ 6:58-66).

*பரலோக மன்னா ... பூவுலக ஆகாரம்*
*அநேகர் அவரைவிட்டுப் பிரிந்தனர்* (வச 60,66)
*நீங்களும் போய்விட விருப்பமா?*
பேதுரு: *''நித்திய ஜீவ **வார்த்தைகள்**''* (வச 68)

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் யூதாசை இயேசு ''பிசாசு'' என்றழைத்தார் (வச 67-71) — பொருளாசை

- திருச்சபையில் சதுசேயர் (அப் 23:8)

*''உயிர்த்தெழுதல், தூதர், ஆவி''* எதையும் நம்புவதில்லை.
எனவேதான் அவர்கள் "Sad-you-see!"

மிகவும் பரிதபிக்கப்படவேண்டிய நிலை (1 கொரி 15:19,20)
*''காட்டு மிருகங்கள்''* (வச 32)

### *3. சடங்காச்சாரச் சிறையிலிருந்து விடுதலை* (Ritualism)

- கிறிஸ்துவின் மரணம் சடங்காச்சார மார்க்கத்திற்குச் சாவுமணி — *''திரைச்சீலை மேலிருந்து இரண்டாய்க் கிழிந்தது''* (மத் 27:51)

எனவே,
— புனிதத் தலம் கிடையாது ... *''எங்கேயெல்லாம்''*
யோ 4:20,21,23/அப் 7:47-49)
தேவாலயம் → வீடு வீடாய் *(ஜீவனுள்ள கற்கள்)*



— ஆசாரியர் வகுப்பு கிடையாது ... *''யாரென்றாலும்''*
அனைத்து விசுவாசிகளும் ஆசாரியர் (1 பேது 2:5,9)

- கிழிந்துபோன திரைச்சீலையை மறுபடியும் தைக்காதீர் —

அலங்கரிக்கப்பட்ட பீடங்கள்
மெழுகுவர்த்திகள் ஏற்றுதல்
சிலுவைக்குமுன் வணங்குதல்
ஆயர்களுக்குச் சிறப்பாடைகள் ...

இவையெல்லாம் *''செத்த கிரியைகள்.''*
கிறிஸ்துவின் இரத்தம் இவையெல்லாவற்றினின்றும்
நம்மைக் *கழுவுகிறது* (எபி 9:14)

- நடைமுறைச் சத்தியங்கள் —

அ) கிருபாசனம் எல்லாருக்கும் திறப்பு — நடுவர் கிடையாது.
கத்தோலிக்கர் — இயேசுவைக் கொண்டுவந்த மரியாள்!
புராட்டஸ்டன்ட்ஸ்—இயேசுவிடம் கொண்டுவரும் பிரசங்கிமார்!

இயேசு ''நமக்காகவே'' அங்கு நுழைந்துவிட்டார்!
*நம்மை முற்றும் முடிய இரட்சிக்க வல்லவர்* (எபி 7:25-27)

ஆ) கர்த்தரின் பந்தி — சடங்காச்சார வாசனை கூடாது.
இது அவரை *''நினைவுகூருவதற்கு''* மட்டுமே (1 கொரி 11:25)

இ) *ஆகாரம் ... பானம் ... பண்டிகைகள் ...*
ரோ 14:5,6,9 ... நிழல் vs. பொருள்
சடங்கு vs. உட்கருத்து
(Shadow/Substance ... Ritual/Reality)

### *4. பிரமாணச் சிறையிலிருந்து விடுதலை* (Legalism)

- *''கிறிஸ்துவே நியாயப்பிரமாணத்தின் முடிவு''* (ரோ 10:4)

பிரமாணம் X விசுவாசத்தினாலுண்டாகும் நீதி

(வச 6,7) ... *''யார் ஏறுவான் ... இறங்குவான்?''*
அதாவது, நீங்கள் செய்யவேண்டியதில்லை;
கிறிஸ்து ஏற்கனவே செய்துவிட்டார்!
("Do" vs. "Done!")

*நமக்காகச் ''சாபமாகி'' நம்மை நியாயப்பிரமாணத்தின்*
*''சாபத்திலிருந்து'' விடுதலையாக்கினார்* (கலா 3:13)
*கையெழுத்து அழிக்கப்பட்டது ... சிலுவையில்*
*ஆணியறையப்பட்டது* (கொலோ 2:14)
கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டார், ஆனால் எழுந்தார்;
கிரியாப்பிரமாணம் சிலுவையிலறையப்பட்டது, எழுந்திராது!

புதிய உடன்படிக்கையென்பது பழையதோடு சேர்க்கப்பட்டதல்ல;
புதிய உடன்படிக்கை பழையதை நிராகரித்துவிட்டது!

- *''உயிர்த்தெழுதலின் வல்லமை''* மற்றும் *''பாடுகளின் ஐக்கியம்''* ஆகியவற்றை அறிவதற்காய்ப் பவுலின் பிரமாணக் கொள்கை தூக்கியெறியப்பட்டது (பிலி 3:4-10)

அதாவது, முதலாவது — உயிர்த்தெழுதலின் வல்லமை
அடுத்து — பாடுகளின் ஐக்கியம்
அதாவது, பாடனுபவிக்க வல்லமை!

ரோமர் & கலாத்தியர் நிருபங்களை அடிக்கடி வாசியுங்கள்.
இல்லையேல் கிறிஸ்துவில் உங்கள் சுயாதீனம்
கள்ள உபதேசிகளால் திருடப்படும் —
கலா 2:4 ... *விடுதலையை இரகசியமாய் உளவுபார்க்க ...*

எ.கா.) விசேஷித்த நாட்கள் ... தனிப்பட்டவரது விருப்பு
உணவு வகைகள் ... தனிப்பட்டவரது விருப்பு
*''நியாயந்தீர்க்க நீ யார்? எழுந்தது கிறிஸ்தல்லவா?''* (ரோ 14:1-10)
உபவாசம், தசமபாகம் போன்றவைகூட —
*புது ரசம் ... புதுத் துருத்தி* (மாற் 2:18-22)

## *5. தோல்விச் சிறையிலிருந்து விடுதலை* (Defeatism)

- பரமேறிய கிறிஸ்துவின் வரமாகிய ஆவியானவர் இறங்கியதும் பேதுருவுக்கும் பிற சீடருக்குமிருந்த தோல்வி மனப்பான்மை பறந்தோடியது —

அப் 2:32,33/4:10,13 ... *தைரியம் ...*

இயேசு பரமேறியிராவிடில்,
ஆவியானவர் இறங்கியிருக்கமாட்டார் —
யோ 16:7 ... *''நான் போவது உங்களுக்கு நல்லது''*



- பரமேறிய கர்த்தரிடமிருந்து ஊழிய வரங்கள் —

எபே 4:8-13 ... *அப்போஸ்தலர் ... தீர்க்கதரிசிகள் ...*

*''ஒவ்வொருவருக்கும்''* வரங்கள் —
ரோ 12:4-6 ... *கிருபையின்படி வரங்கள்*

- *''சகல அதிகாரமும் ... ஆகையால் போங்கள்''* (மத் 28:18,19)

பாதாளத்தின் வாசல்கள் சீடரின் தீவிரத்தைத் தணிக்க முடியவில்லை —
*எங்கும் சென்று பிரசங்கித்தனர்!* (மாற் 16:20)
*''கிறிஸ்து எழுந்திராவிடில் பிரசங்கம் வீண்!''* (1 கொரி 15:14)

அவர்கள் விட்ட சவால் —
*''பாதாளமே, உன் ஜெயம் எங்கே?''* (1 கொரி 15:55)
*''எனவே ... அசையாதவர்களாய் ... பணியில் பெருகுங்கள் ... உங்கள் உழைப்பு வீண்போகாது''* (வச 58)

**பாடுங்கள்:** *ஜெய கிறிஸ்து முன்செல்கிறார்,*
*ஜெயமாக நடத்திடுவார்;*
*ஜெயக் கீதங்கள் நாம் பாடியே,*
*ஜெயக் கொடியும் ஏற்றிடுவோம்;*
*ஜெயம் அல்லேலூயா அவர் நாமத்திற்கே!*
— சகோதரி சாராள் நவரோஜி (1938-2014)

## *6. பிரிவினைச் சிறையிலிருந்து விடுதலை* (Factionalism)

- கிறிஸ்து இறங்கியதாலும் ஏறியதாலும், *கிரேக்கனென்றுமில்லை, யூதனென்றுமில்லை* (கொலோ 3:1,11)

| | |
|---|---|
| *யூதனா, கிரேக்கனா* | — இனவாரி |
| *விருத்தசேதனமா, இல்லையா* | — சடங்காச்சாரம் |
| *புறவினத்தானா, புறநாட்டவனா* | — பூகோள நீதி |
| *அடிமையா, சுயாதீனனா* | — சமூக அந்தஸ்து |

எ.கா.) எதிர்த் துருவங்கள் போன்ற இரு இனத்தார் —
யூதர் & புறவினத்தார்
*''பிரிவினைச் சுவர் தகர்த்தெறியப்பட்டது''* (எபே 2:14)
*''பகையைக் கொன்று''* ... (வச 16)

சிலுவை: ஒப்புரவாகுதலின் சின்னம்

- கிறிஸ்து நமது அஸ்திபாரமானால் இடம், இனம், நிறம் என்றெல்லாம் கிறிஸ்தவர்கள் பிரிந்து நிற்பது எப்படிச் சாத்தியம்?
  *''கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?''*

  தனி நபர்களைச் சுற்றிய வட்டங்கள் வேண்டாம் —
  *பவுல் ... அப்பொல்லோ ... கேபா ...*
  கடிந்து கொள்ளல்: *''பவுலா உங்களுக்காய்ச் சிலுவையிலறையப்பட்டான்?* (1 கொரி 1:10-13)

  பிரசங்கிமாரும் தலைவர்களும் மக்களுக்குச் சொந்தம்;
  மக்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தம்;
  கிறிஸ்து பிதாவுக்குச் சொந்தம்! (1 கொரி 3:21-23)

- கிறிஸ்தவரல்லாதோருக்குமுன் நமது பலமின்மைக்கும் சாட்சியின்மைக்கும் முக்கிய காரணம் —
  தனிக்காட்டுத்தனம் ...
  சபைப்பிரிவு வெறி ...
  சொந்த சாம்ராஜ்யங்கள் ...
  ஒருவரையொருவர் குற்றம் சாட்டுதல்
  தேவனுக்குத்தான் இருதயங்கள் தெரியும்!

### 7. *பாதக நோக்குச் சிறையிலிருந்து விடுதலை* (Pessimism)

அதாவது, அவிசுவாசம்

- பயத்தினால் சீடர் அறையைப் பூட்டி உள்ளே இருந்தனர் ...
  உயிர்த்த கர்த்தர் உள்ளே நுழைந்து *''சமாதானம்''* என்றார்!

  அவர்கள் பயம் பறக்கும்படி அவர்கள்மீது ஊதினார் —
  யோ 20:19-22
- **எல்லாச்** சபைகளுக்கும் கிறிஸ்துவின் செய்தி —
  வெளி 1:17-19 ... *பயப்படாதே ... ஆதியும் அந்தமும் ...மரித்தேன்...உயிர்த்தேன்...பாதாளம்...மரணச் சாவிகள்*

- உயிர்த்து 40 நாட்கள் கழித்துக் கிறிஸ்து பரமேறினார் —
  மறுபடியும் பயம், பாதகச் சிந்தை —
  வெண்ணுடையில் இருவரைத் தேவன் அனுப்பினார்;



அவர்கள் சொன்னது —

*''ஏன் மேலேயே பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? ...*
*புறப்பட்டுச் சென்று பணியில் ஈடுபடுங்கள் ...*
*சென்றபடியே அவர் திரும்ப வருவார் ...''*
(அப் 1:9-11)

- அவர் திரும்ப வருவார் என்பதற்குப் பரமேறுதலே அத்தாட்சி — (யோ 14:1,3) ... *உங்களுக்காக ஓரிடத்தை ஆயத்தம்பண்ணச் செல்கிறேன் ... உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக.*

### *முடிவுரை*

கிறிஸ்து இறங்கியதாலும் ஏறியதாலும் —

மாம்சீகச் சிறை ஒழிந்தது
பணப் பிரியச் சிறை ஒழிந்தது
சடங்காச்சாரச் சிறை ஒழிந்தது
பிரமாணச் சிறை ஒழிந்தது
தோல்விச் சிறை ஒழிந்தது
பிரிவினைச் சிறை ஒழிந்தது
பாதகநோக்குச் சிறை ஒழிந்தது

இனிச் சிறை கிடையாது; சிறகடித்துப் பறந்திடுவோம்!